தமிழ்நாடு உருது முஸ்லீம் நல அமைப்பு (TAMILNADU URDU MUSLIM WELFARE ORGANISATION) மாநில நிர்வாகிகள் (22.06.2026), அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

சென்னை காமராஜர் நினைவகத்தில்

மறுசீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்காவிட்டால் போராட்டம்!

முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை!

சென்னை, ஜூன். 25-

சென்னை தியாகராயர் நகரில் உள்ள முன்னாள் முதல் அமைச்சர் காமராஜரின் நினைவகத்தில் தற்போது அரசு சார்பில் மறுசீரமைப்புப் பணிகள் நடைபெற்றுவருகிறது. இந்தபணிகள் மிக மெதுவாக நடைபெறுவதாலும், நினைவகம் பூட்டிக் கிடப்பதாலும் அங்கு வரும் பொதுமக்கள் ஏமாற்றத் துடன் திரும்பிச் செல்லும் நிலை உள்ளது. இதுகுறித்து எழுந்த புகார்களைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், நாடார்

சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் மின்னல் ஸ்டீபன், தேசியநாடார்சங்கபொதுச் செயலாளர் விஜயகுமார் ஆகியோர் நேற்று நேரில் சென்று அங்கு ஆய்வு செய்தனர்.

பின்னர் நிருபர்களிடம் அனிதா ராதாகிருஷ்ணன் கூறியதாவது:

“காமராஜர் நினைவகத்தைப் பாரம்பரிய முறைப்படி பராமரிக்க நாங்கள் ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கினோம். தேர்தலுக்கு முன்பு வரை பணிகள் விரைவாக நடைபெற்று வந்தன. தேர்தல் காரணமாகப் பணிகள் தடைபட்டன. தற்போது த.வெ.க. ஆட்சியில் பராமரிப்பு பணிகள் முறையாக நடைபெறவில்லை. ஜூலை 15ந்தேதி காமராஜரின் பிறந்தநாள் கொண்டாடப்பட உள்ளது. அன்று தமிழ்நாடு முழுவதும் இருந்து பொது மக்கள் நினைவகத்திற்குவருவார்கள். அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை உள்ளது. தமிழக அரசு பராமரிப்பு பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பார்வைக்குத் திறக்க வேண்டும். ஒரு வாரத்தில் பராமரிப்பு பணிகளை முடிக்கவில்லை என்றால், காமராஜர் அனுதாபிகளை ஒன்றிணைத்து தமிழகம் முழுவதும் கடுமையான போராட்டங்களை நடத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

புதுச்சேரி, திருவாரூர் செல்லும் வழியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

செஞ்சி மஸ்தான் தலைமையில் கழகத்தினர் அளித்தனர்!

மரக்காணம், ஜூன். 25-

புதுச்சேரி, திருவாரூர் செல்லும்கழகத்தலைவர்மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மரக்காணத்தில் மாவட்ட பொறுப்பாளர்செஞ்சிமஸ்தான் தலைமையில் தி.மு.க. வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று மாலை புதுச்சேரியில்நடைபெறும் இயக்குனர் கௌதமன் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியிலும், திருவாரூரில் நடைபெறும் முன்னாள் அமைச்சர் மதிவாணன் அவர்களின் இல்ல திருமண விழாவில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக செல்லும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட எல்லையானமரக்காணத்தில்மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மேளதாளம்முழங்கஉற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாநிலத்தீர்மானகுழுஉறுப்பினர்செஞ்சிசிவா, விழுப்புரம்வடக்குமாவட்டதுணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றியபெருந்தலைவர்கள் மரக்காணம்தயாளன், ஒலக்கூர் சொக்கலிங்கம், துணை பெருந்தலைவர்கள் பழனி, ராஜாராமன், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மயிலம் வடக்குஒன்றியசெயலாளர் மணிமாறன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்டஅணிய அமைப்பாளர்கள் கேனி பட்டு செந்தில்குமார், நடுப்பட்டுசெந்தில்குமார், டி.கே.பி..ரமேஷ், எம்.டி.பாபுஉள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சால்வை மற்றும் புத்தகங்களை வழங்கி சிறப்பான வரவேற்ப்பு அளித்தனர்.

விழுப்புரம் அரசு கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் ஏமாற்றம்!

பெற்றோர்களுடன் உள்ளிருப்புப் போராட்டம்! கூடுதல் இடம் ஒதுக்காமல் அரசு அலட்சியம்!

விழுப்புரம், ஜூன் 25-

விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, மகளிர் கல்லூரிகளில் மாணவ, மாணவிகள் சேர்வதற்கு இடம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்ததால் தங்களது பெற்றோர்களுடன் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திராவிட மாடல் ஆட்சி காலங்களில் கூடுதலாக சேர்க்கைக்கு 20 சதவீதம் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போதைய அரசின் அலட்சியத்தால் உயர்கல்வி செல்லும் மாணவ, மாணவிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தமிழகத்தில் பிளஸ்2 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு உயர்கல்விக்கான மாணவ, மாணவிகள் சேர்க்கை நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் உள்ள சுமார் 192 அரசுகலைமற்றும் அறிவியல்கல்லூரிகளில் 1.25 லட்சம் இடங்களுக்கு லட்சக்கணக்கான விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

தற்போது சேர்க்கை துவங்கியநிலையில்கட்ஆப் மதிப்பெண், வெளிப்படைதன்மையின்றி மாணவ, மாணவிகள் சேர்க்கைநடைபெறுவதாகவும், இதனால் பல இடங்களில் குளறுபடி ஏற்பட்டு மாணவ, மாணவிகள் பெற்றோருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி விழுப்புரம் அரசு மகளிர் கல்லூரிக்கு சேர்க்கைக்கு வந்த 50க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்களுக்கு கல்லூரி நிர்வாகம் சீட்டு இல்லை என்று கூறியதால் ஆத்திரமடைந்து தங்களது பெற்றோர்களுடன் கல்லூரி முன்பு உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து பெற்றோர்கள் கூறுகையில், எங்களுக்கு சேர்க்கைக்கு வரச்சொல்லி கல்லூரியிலிருந்து எஸ்எம்எஸ் வந்தது. அதில் சான்றிதழ், கல்வி கட்டணம் உள்ளிட்டவைகளை கொண்டு வரச் சொன்ன நிலையில் நாங்கள் அதற்கேற்ப தயாராக வந்தோம். ஆனால் இங்கு வந்தவுடன் சீட்டு முடிந்துவிட்டதாக கூறி வெளியேற்றுகின்றனர்.

கடந்த ஆட்சி காலங்களில் கட்ஆப் மதிப்பெண்களை வெளியிட்டு வெளிப்படைதன்மையுடன் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. ஆனால்தற்போது சிபாரிசு என்ற பெயரில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

எங்களைவிட குறைவானமதிப்பெண்பெற்றவர்களுக்குக்கூடசீட்டுகொடுக்கிறார்கள். ஆனால் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு சீட்டு வழங்கப்படவில்லைஎன்றுகூறிபோராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து தாலுகா காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மாணவிகள், பெற்றோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்பின்னர் கல்லூரி முதல்வர், பேராசிரியர்களிடம்பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை கலைத்தனர்.

இதுகுறித்து பெற்றோர்கள் தரப்பில் கூறுகையில், விழுப்புரம் கீழ்பெரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.ஏ., பி.எஸ்சி உள்ளிட்ட 13வகையானபாடப்பிரிவுகளுக்கு சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களுக்குநடப்பாண்டு 20ஆயிரம்விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

அதேபோல்அரசுமகளிர் கல்லூரியிலும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களுக்கு இதே அளவிலான விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவிக்கின்றது. கட்ஆப் மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடைபெறவில்லை. கடந்த ஆட்சியில் கூடுதலாக 20சதவீதம்மாணவர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால்தற்போதைய அரசில் மாணவர் சேர்க்கை குறித்தும், அதில் உள்ள முறைகேடுகள், மாணவ, மாணவிகளின் சிரமங்கள் குறித்து கண்டுகொள்ளவில்லை. கடந்தகாலஅரசின் திட்டங்களால் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கல்வியின்பின்தங்கியவிழுப்புரம் மாவட்டத்தில் அரசு கல்லூரியில் மாணவர் சேர்க்கை முறைகேடுகள் குறித்து அரசு கண்டுகொள்ளாமல் உள்ளது பெற்றோர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மாவட்ட ஆட்சியர் நேரடியாக ஆய்வு செய்து அரசுகல்லூரிகளில் நேர்மையான முறையில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று கோரிக்கைவைத்துள்ளனர்.

புதுச்சேரி, திருவாரூர் செல்லும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மரக்காணத்தில் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, விழுப்புரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்ட ஒன்றியச் செயலாளர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

திரிஷாவுடன் முதல்வர் விஜய் பிறந்தநாள் கொண்டாட்டம்:

அமோனியா விபத்து 10 பேர் பலி! அதே நாளில்தான் இதுவும் நடந்து இருக்கு!

தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!

சென்னை, ஜூன் 25-

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு விபத்தில் 10 தொழிலாளர்கள் உயிரிழந்ததும், 60க்கும் மேற்பட்டோர் உடல்நலக்குறைவால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதும் தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த துயர சம்பவம் நடைபெற்ற அதே நாளில், தமிழக முதல்வரும் தமிழக வெற்றிக் கழக (த.வெ.க.) தலைவருமான விஜய் தனது 52 வது பிறந்தநாளைக் கொண்டாடியதாக சமூக வலைதளங்களில் விவாதம் எழுந்துள்ளது. குறிப்பாக நடிகை திரிஷா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விஜய்யுடன் கேக் வெட்டிய புகைப்படத்தை பகிர்ந்ததைத் தொடர்ந்து இந்த விவகாரம் மேலும் பேசுபொருளாகியுள்ளது.

விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து திரிஷா வெளியிட்ட பதிவில், “எல்லாவற்றையும் அர்த்தமுள்ளதாய் ஆக்கிய நபருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டிருந்தார். மேலும், நள்ளிரவு 12 மணிக்கே வாழ்த்து தெரிவித்ததை சுட்டிக் காட்டும் வகையில் “00:00” என்றும் பதிவிட்டிருந்தார்.

இதற்கிடையில், திருவள்ளூர் விபத்து காரணமாக தலைமைச் செயலகத்தில் திட்டமிடப்பட்டிருந்த பிறந்தநாள் கேக் வெட்டும் நிகழ்வை முதல்வர் விஜய் ரத்து செய்ததாக தகவல்கள் வெளியானது. உயிரிழப்புகள் நிகழ்ந்த சூழலில் கொண்டாட்டங்கள் பொருத்தமல்ல என்ற காரணத்தால் அவர் அந்த நிகழ்வைத் தவிர்த்ததாக கூறப்பட்டது.

ஆனால், அதே நாளில் திரிஷாவுடன் கேக் வெட்டியதாக வெளியாகிய புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் விமர்சனங்களை கிளப்பின. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்காமல் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதாக சிலர் குற்றம்சாட்டினர்.

இந்த நிலையில், தி.மு.க. ஐ.டி.விங் தனது எக்ஸ் (X) சமூக வலைதளப் பதிவில் இந்தவிவகாரத்தைவிமர்சித்துள்ளது. நடிகை திரிஷா நடித்ததிருப்பாச்சிதிரைப்படத்தின் ஒரு காட்சியை பகிர்ந்த அந்த பதிவில், அமோனியா வாயுக் கசிவால் 10 பேர் உயிரிழந்ததும், பலர் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், “அந்த நாளில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று சந்திக்கவில்லை. எனவே அவருக்காக தெரிவிக்கப்படும் அனைத்து பிறந்தநாள் வாழ்த்துகளும் அர்த்தமற்றதாக தோன்றுகின்றன” என தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம் செய்துள்ளது.

இந்த விவகாரம் தற்போது சமூகவலைதளங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. அதே நேரத்தில், விபத்து தொடர்பான மீட்பு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

முதல்வரின் சைகை ஆரோக்கியமான பண்பாடான செயல் அல்ல!

தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 25-

முதல்வர் விஜய்யின் பதிலுரைக்கு பின் தலைமை செயலக வளாகத்தில் மனிதநேய ஜனநாயக கட்சி சட்டமன்ற உறுப்பினர் தமீமுன் அன்சாரி நிருபர்களிடம் கூறியதாவது: -

பேரவையின் மாண்பையும், மரபுகளையும் சினிமா படப்பிடிப்பு தளமாக மாற்றுவது ஆரோக்கியமானது அல்ல. மக்களின் ஆதரவோடு வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ள முதலமைச்சர், தாங்கள் நல்லாட்சியை வழங்குவோம் என்று தொடர்ந்து கூறி வருகிறார்.

அவ்வாறு கூறும் முதலமைச்சர், தன்னுடைய முதல் பதிலுரையிலேயே சைகை மூலமாகப் பேசியிருப்பது ஏற்கத்தக்கதல்ல. இந்த சைகை எதைக் காட்டுகிறது? எதிர்க்கட்சிகளை மொத்தமாக முடித்து விட்டோம் என்ற

சைகையை வெளிப்படுத்துகிறதா?

மக்களை வசியப்படுத்துவதற்காக திரைப்பட வசனங்களில் எதை வேண்டுமானாலும் வெளிப்படுத்தலாம், அது அவரவர் விருப்பம். ஆனால், சட்டப்பேரவையில் இப்படிப்பட்ட சைகைகளைச் செய்வது, அதுவும் ஒரு முதலமைச்சர் செய்வது, ஆரோக்கியமான போக்காகத் தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

உசிலம்பட்டியில் குடிநீர் தட்டுப்பாடு!

காலிக்குடங்களுடன் பெண்கள் சாலை மறியல்!

மதுரை. ஜூன் 25-

உசிலம் பட்டி அருகே குடிநீர் வசதிகோரி காலிக்குடங்களுடன் பெண்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே குளத்துப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு முறையாக குடிநீர், கழிவுநீர்கால்வாய், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப் படவில்லை. இதுகுறித்து இக்கிராம மக்கள் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் குறைதீர் கூட்டங்களில் தொடர்ந்து கோரிக்கை மனுக்களை அளித்து வந்தனர். இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதையடுத்து குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்றித்தரக்கோரி நேற்று முன்தினம் காலிக்குடங்களுடன் மதுரை தேனி செல்லும் நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட் டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. போராட்டம் காலையில் நடைபெற்றதால், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பல்வேறு வேலைகளுக்கு செல்லும் பொது மக்களின் வாகனங்கள் தொடர்ந்து செல்ல முடியாது போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்துவிரைந்துவந்த உசிலம்பட்டி தாலுகா போலீசார், சாலை மறியலில் ஈடுபட்ட கிராம மக்களிடம்பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்து அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணலாம் என்று கூறினர். இதனை ஏற்று பொது மக்கள் தங்கள் போராட்டத்தை முடிவுக்குகொண்டுவந்தனர். இந்த திடீர் போராட்டத்தால், அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும்மேலாகபோக்குவரத்துபாதிக்கப்பட்டது. இதனால் நீண்டதூரத்திற்குவாகனங்கள் அணிவகுத்து நின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாளை யொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் கோவை நாகநந்தினி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் கிருத்திகா தேவி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா, ஒன்றியச் – நகர செயலாளர்கள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.